Praise the Lord:

ஆலோசனையும் பெலனையும் அருளும் ஆவியானவர் நம்மோடு இருக்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை ஆட்கொண்டு வழிநடத்துவாராக. ஆமென்.

யூதா/Jude 1:20-21 (பக்கம் 333)

நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைஉறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்.

But you, dear friends, build yourselves up in your most holy faith and pray in the Holy Spirit. Keep yourselves in God's love as you wait for the mercy of our Lord Jesus Christ to bring you to eternal life. (NIV)

கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருப்போம். அந்த இரக்கம் இம்மைக்குரிய ஆசீர்வாதத்திற்கு மட்டுமல்லாமல் **நித்தியஜீவனுக்கேதுவாக** இருக்க வேண்டும். ஆமென். அந்த விசுவாசம் நம்மில் நாளுக்கு நாள் பெருக தலைகளை தாழ்த்தி இப்போ ஜெபிப்போம்.

## Let us Pray

பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள் என்ற சொன்னீரே. ஆண்டவரே அதை நாங்கள் விவாசத்தோடே நாடவும், **மற்றவர்களும் அதை உணரவும்** எங்களை ஆட்கொண்டு, ஆலோசனை கொடுத்து அதை நிறைவேற்ற பெலத்தை கொடுத்து, ஆசீர்வதியும். . . . ..

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரக்கத்தைப் பெற நாம் பல காரியங்களுக்காக காத்திருக்கலாம். அந்த காத்திருத்தலின் முக்கியமான ஒன்றாக. . . . **நித்தியஜீவனுக்கேதுவாக** இருக்கவேண்டும். நம்மோடு சேர்ந்து மற்றவர்களும் இதற்காக காத்திருக்க, நாம் நம்மை தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அப்படி நம்மைத் தகுதிபடுத்திக்கொள்ள நம்மாலே முடியாது. அந்த தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது என்பதையும் நாம் எப்பொழுதும் மறக்காமல் இருப்போம். ஆமென்.

சத்தியத்தின் போதனையில் நாமும் ஜீவித்து மற்றவர்களையும் ஜீவிக்கவைக்க விரும்புகிறோம்.

தீத்து/Titus 2:11-13 (பக்கம்: 296)

ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, <u>நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,</u>
நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்போதிக்கிறது.

12It teaches us to say "No" to ungodliness and worldly passions, and to live self-controlled, upright and godly lives in this present age, 13while we wait for the blessed hope—the glorious appearing of our great God and Savior, Jesus Christ, (NIV)

<u>நாம். . . .லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, . . .</u>

<u>இந்த வார்த்தை ஆங்கில மொழிபெயர்ப்பிலே எப்படி குறிக்கப்பட்டிக்கிறது என பாருங்கள். .</u>

"No" to . . . worldly passions, (NIV)

. . . sinful pleasures (NLT)

. . .. .worldly lusts, (KJV)

. . .. worldly (passionate) desires, (AMP)

From Dictionary:

Worldly: Of, relating to, or devoted to the temporal world.

. .. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய <u>உலகத்திலுள்ளவைகளெல்லாம்</u> பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.
உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான்/ 1 John 2:16-17)

<u>*சிந்தித்து தியானித்துப் பார்த்தோமானால். . .*</u>

*பல நேரங்களிலே . . . வாழ்க்கையிலே நமது மாம்சத்தின் இச்சைகளை நாமே வெறுக்க முடியவில்லையென்றால், மற்றவர்களுக்கு எப்படி உணர்த்துவது?*

தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,
. . . ஆங்கில மொழிபெயர்ப்பிலே இந்த வார்த்தைகளை கவனியுங்கள்.

**தெளிந்தபுத்தியும்** to live . . . .self-controlled. .. . (NIV)
. . . with wisdom. . .(NLT)
. . . Soberly. . . (KJV)

அந்த வார்த்தைக்கு உள்ள அர்த்தத்தை கவனியுங்கள். .

From Dictionary:
**தெளிந்த:** சுத்தப்படுதல், நன்றாக அறிதல்.
**புத்தி:** அறிவு, எண்ணம், மனப்போக்கு, குணம்
Soberly, self-controlled
**தன்னடக்கம், புலனடக்கம், தன் உணர்ச்சிகளை அடக்கியாளுதல்**
Restraint of one's emotions, desires, or inclinations.

தெளிந்த நீரோடை போல. . . .தெளிந்த புத்தி. .

**கர்த்தர் கொடுக்கும் புத்தியில் நமது மாம்சத்தின் புத்தி கலக்கப்படாத. . . தெளிந்த புத்தி.**

*மேலும் தியானியுங்கள் . . .கர்த்தர் வசனம் மகா விஸ்தாரமானது. . .*

இப்படியாக இந்த பூமியிலே நாம் வாழவேண்டுமானால்,

பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளையே நாடவேண்டும்.

மாம்ச இச்சைகளிலே வாழ்கிற உலகத்தவர்களை ஆண்டவருக்குள் கொண்டுவர,

கிறிஸ்துவினுடையவர்களாகிய நாம், நமது மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்க கர்த்தர் நம்மை ஆட்கொள்வாராக. **ஆமென்.**

வேதம் தெளிவாகவும் சொல்கிறது. . .

**மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.** (ரோமர் 8:6)

**மாம்ச சிந்தையை சிலுவையில் அறைந்து,**
**கிறிஸ்துவின் ஆவியானவரை நாம் முழுமையாக தரித்துக் கொண்டிருந்தால். . . .**
*தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,*
***கர்த்தரை நோக்கி, கர்த்தரின் விருப்பத்தின்படி காத்திருக்கலாம்.***

நாம் ஆழ்ந்து சிந்தித்து, தியானித்து ஆராய்ந்து பார்த்தால். . . ..

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. என்ற வசனம்தான் எனக்கு உணர்த்தப்படுகிறது.

உலகத்து சூழ்நிலைகளும், மனிதர்களின் மாம்ச சிந்தைகளின் கிரியைகளும்
நம்மை பெலவீனப்படுத்தும்போது. . .நம் உள்ளத்திலே விசாரங்கள் பெருகுவதை நாம் உணரலாம். . .

எப்படி இதிலிருந்து விடுதலை. . . வேறு வழியெதுவுமில்லை. அவரே சகலமும்.

சங்கீதம்/Psalm 27:14 (பக்கம்: 686)

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

Wait on the LORD; Be of good courage, And He shall strengthen your heart; Wait, I say, on the LORD! (KJV)

கர்த்தரே நமது இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். அவர் ஸ்திரப்படுத்திய இருதயத்தோடு அவருக்கே காத்திருப்போம்.

காத்திருக்க சொல்பவரும் அவரே. காத்திருக்க பெலவீனப்படும்போது, ஸ்திரப்படுத்துபவரும் அவரே.
மகிமையுள்ள சந்நிதானத்திலே மாசற்றவர்களாக நிறுத்தவல்லவரும் அவரே.
அவராலே ஸ்திரப்பட்டவர்களாக அவரை நோக்கி காத்திருக்க அனைவரும் எழுந்திருப்போம்.

## Let us Pray

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*